# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, இரசாயன ஆயுதங்கள் சமவாயச் சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, நவெம்பர் மாதம் 23 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 33.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, இரசாயன ஆயுதங்கள் சமவாயச் சட்டம்**

[*2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச. வ.- ஓ. 66/2003*

**இரசாயன ஆயுதங்களின் அபிவிருத்தி, தயாரிப்பு, தொகைக் குவிப்பு மற்றும் பயன்பாடு என்பனவற்றைத் தடைசெய்தலும், அவற்றை அழித்துவிடுதலும் பற்றிய சமவாயத்தைச் செயற் படுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இதனகத்துப்பின்னர் "சமவாயம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் இரசாயன ஆயுதங்களின் அபிவிருத்தி, தயாரிப்பு, தொகைக் குவிப்பு மற்றும் பயன்பாடு என்பனவற்றைத் தடைசெய்தல் பற்றியதும், அவற்றை அழித்துவிடுதல் பற்றியதுமான சமவாயம், ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்று மூன்றாமாண்டு சனவரி பதினான்காம் தேதியன்று இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கையொப்பமிடப்பட்டதாதலாலும் :* முன்னுரை.

*அத்துடன், இலங்கையானது, சொல்லப்பட்ட சமவாயத்தை உறுதிப்படுத்தியுள்ளதுடன் மேற்சொல்லப்பட்ட சமவாயத்தின் கீழான இலங்கையின் கடப்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகளைச் செய்தல் இலங்கை அரசாங்கத்துக்கு அவசியமாக வந்துள்ளதாதலாலும் :*

*ஆகவே, இப்பொழுது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக :-*

## பாகம் I

### முதனிலையானவை

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, இரசாயன ஆயுதங்கள் சமவாயச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலா மென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

2 – PL 002324 – 1,450 (2007/08)

*சட்டத்தின் ஏற்புடைமை.*

**2.** (1) இச்சட்டம் -

(அ) இலங்கையினுள்ளும் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கப்பலில் அல்லது வானூர்தியிலும் உள்ள எவரேனுமாளினால் ; அல்லது

(ஆ) இலங்கைக்கு வெளியே, இலங்கையின் எவரேனும் பிரசையினால்,

செய்யப்படும் அல்லது செய்யாதுவிடப்படும் செயல்களுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், இலங்கைக்கு வெளியே எங்கேனும் புரியப்படும் இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு தொடர்பிலான வழக்கு நடவடிக்கைகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது பயனைக் கொண்டு மட்டுமே, சட்டத்துறைத் தலைமையதிபதியின் மதியுரையின்மீது தவிர, ஏதேனும் நீதிமன்றத்தில் தொடுக்கப்படுதலாகாது.

*சட்டமானது அரசைப் பிணிக்கின்றது.*

**3.** இச்சட்டமானது, அரசை, அதன் எல்லாத் தன்மைகளிலும் பிணிக்கின்றது : ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்திலுள்ள தெதுவும், தவறொன்றுக்காகக் குற்றவழக்குத் தொடுக்கப்படுவதற்கு அரசை இலக்காக்குதலாகாது.

*சட்டம் வலுவில் இருப்பதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டுமென வெளிப்படுத்துவதற்கான தத்துவம்.*

**4.** (1) அமைச்சர், அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய சமவாயத்தின் XVI ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் நிபந்தனைகளின்படி இலங்கை அரசாங்கம் சமவாயத்திலிருந்து பின்வாங்கும் விடயத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வலுவிலிருப்பதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டுமென வெளிப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்றின் பயனாக இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வலுவில் இருப்பதிலிருந்து இல்லாதொழிகின்றமை எது எவ்வாறிருப்பினும் —

(அ) அத்தகைய கட்டளையை ஆக்குவதற்கு முன்னராக, இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதி, விதி அல்லது கட்டளையின் நியதிகளின்படி முறையாகச் செய்யப்பட்ட அல்லது உறப்பட்ட எதனதும் செயற்பாட்டின் வலிதாந்தன்மை பாதிக்கப்படலாகாது ;

(ஆ) அத்தகைய கட்டளையை ஆக்குவதற்கு முன்னராக, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் திரண்ட அல்லது உறப்பட்ட ஏதேனும் உரிமை, சிறப்புரிமை, கடப்பாடு அல்லது பொறுப்பின் வலிதாந்தன்மை பாதிக்கப்படலாகாது ;

(இ) அத்தகைய கட்டளையை ஆக்குவதற்கு முன்னராக இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு தொடர்பில் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டம், இழப்பித்தல் அல்லது தண்டனையின் வலிதாந்தன்மை பாதிக்கப் படலாகாதென்பதுடன் வலிதாக விதிக்கப்படலாம் ; அத்துடன்

(ஈ) ஏதேனும் அத்தகைய உரிமை, சிறப்புரிமை, கடப்பாடு அல்லது பொறுப்பு தொடர்பில் ஏதேனும் புலனாய்வு, சட்ட வழக்கு நடவடிக்கைகள் அல்லது பரிகாரத்தின் வலிதாந்தன்மை பாதிக்கப்படலாகாதென்பதுடன் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டிருக்கவில்லை என்றாற்போன்று, ஏதேனும் புலனாய்வு, சட்ட வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படலாம் அல்லது தொடர்ந்து நடாத்தப்படலாம் அத்துடன் ஏதேனும் பரிகாரம், சிறப்புரிமை, கடப்பாடு அல்லது பொறுப்பு வலுவுறுத்தவும்படலாம்.

## பாகம் II

### தேசிய இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தைச் செயற்படுத்துவதற்கான அதிகாரசபையைத் தாபித்தல்

*தேசிய இரசாயன ஆயுதங்கள் அதிகார சபை.*

**5.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தைச் செயற்படுத்துவதற்கான தேசிய அதிகாரசபை என அறியப்படவேண்டிய அதிகாரசபையொன்றை அமைச்சர் தாபித்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக் கொண்டு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

*அதிகாரசபையின் தவிசாளர்.*

**6.** (1) வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அதிகாரசபையின் தவிசாளராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் செயற்படுத்துகை அவருக்குப் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(2) எட்டாம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் பணிப்பாளரின் தலைமையின்கீழ் அதிகாரசபைக்கு உதவுவதற்கென செயலகமொன்று இருத்தல் வேண்டும். அச்செயலகத்துக்கு சட்டத்தின்கீழ் பணிப்பாளருக்கு குறித்தொதுக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட

தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், பரிவதிலும், நிறைவேற்றுவதிலும் பணிப்பாளருக்கு உதவுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அமைச்சின் அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களைச் செயலாளர் நியமித்தல் வேண்டும்.

*அதிகாரசபையின் இலச்சினை.*

**7.** (1) அதிகாரசபையின் இலச்சினையானது, அதிகாரசபையின் தவிசாளரினது கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அது மாற்றவும்படலாம்.

(2) அதிகாரசபையின் இலச்சினையைப் பயன்படுத்துதலானது, அதிகாரசபையின் தவிசாளரினதும், இலச்சினையின் பயன்பாட்டை மெய்யென்றுறுதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட, அதிகாரசபையின் வேறேவரேனும் அலுவலரினதும் கையொப்பத்தின்மூலம் மெய்யென்றுறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் இலச்சினை அதிகாரசபையின் தவிசாளரினதும் வேறோர் உறுப்பினரினதும் முன்னிலையிலன்றி சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது ; இவர்கள் இருவரும் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

ஆயினும், சாதனம் அல்லது ஆவணம் எதிலும் அதிகாரசபையின் இலச்சினை பொறிக்கப்படும் நேரத்தில் தவிசாளர் சமுகமாயிருக்க இயலாதவராக இருக்குமிடத்து தவிசாளரால் அதன் சார்பில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் உறுப்பினர் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(4) அதிகாரசபையானது, அதிகாரசபையின் இலச்சினை பொறிக்கப்பட்ட சாதனங்களின் அல்லது ஆவணங்களின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

*தேசிய இரசாயன ஆயுதங்கள் அதிகாரசபையின் பணிப்பாளரை நியமித்தல்.*

**8.** (1) (இதனகத்துப்பின்னர் 'பணிப்பாளர்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தைச் செயற்படுத்துவதற்கான தேசிய அதிகாரசபையின் பணிப்பாளராக, அமைச்சர், அதிகாரசபையுடன் தொடர்புபட்ட வேலையில் தகைமை பெற்றவரும் அனுபவம் வாய்ந்தவரும், அல்லது இதையொத்த வேலை அனுபவத்தைக்கொண்டவருமான ஆளொருவரை நியமிக்கலாம் ; அதிகாரசபையானது அவ்வாளுக்கு அதன் தத்துவங்களுள் மற்றும் பணிகளும் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளருக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதிகாரசபையின் விதப்புரையின்மீது அமைச்சரினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய சேவை நியதிநிபந்தனைகளுக்கு அவர் அமைந்தவராகவிருத்தலும் வேண்டும்.

(3) செயலகத்தின் நிருவாகப் பணிகளைப் புரிவதற்கு அதிகார சபையின் முடிபுகளைச் செயற்படுத்துவதற்கு பணிப்பாளர் பொறுப்புள்ளவராதல் வேண்டும்.

வழிகாட்டுக் குழுவை நியமித்தல்.

**9.** (1) அதிகாரசபைக்கு அதன் பணிகளைப் புரிவதன்மீதான மதியுரையையளிப்பதற்கு (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வழிகாட்டுக் குழுவொன்றை அதிகாரசபை தாபிக்கலாம்.

(2) குழுவானது, அதிகாரசபையினால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) வெளிநாட்டலுவல்கள் எனும் விடயத்துக்குப் பொறுப் பான அமைச்சரின் அமைச்சின் பன்முக விவகாரங் கள் பிரிவின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அவ்வமைச்சின் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதியொருவர் ;

(ஆ) சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது சுங்கத் திணைக்களத்திலிருந்து அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதியொருவர் ;

(இ) இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) கட்டுப் பாட்டாளர் அல்லது இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுத்) திணைக்களத்திலிருந்து அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதியொருவர் ;

(ஈ) அரசாங்கப் பகுப்பாய்வாளர் அல்லது அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்திலிருந்து அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதியொருவர் ;

(உ) கமத்தொழிற்றிணைக்களத்தின் பீடைகொல்லிகள் பதிவாளர் ;

(ஊ) மத்திய சூழல் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது மத்திய சூழல் அதிகாரசபை யிலிருந்து அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதியொருவர் ;

(எ) கைத்தொழில் தொழினுட்ப நிறுவகத்தின் இரசாயன சூழல் தொழினுட்பவியற் பிரிவின் பணிப்பாளர் ;

(ஏ) இச்சட்டத்துக்கான அட்டவணைகளில் குறித்துரைக்கப் படும் இரசாயனப் பொருட்களில் கண்கூடான அறிவைப்பெற்றுள்ள பல்கலைக்கழகப் பணியாட் டொகுதியின் சிரேஷ்ட உறுப்பினரொருவர் ; அத்துடன்

(ஐ) இச்சட்டத்துக்கான அட்டவணைகளில் குறித்துரைக் கப்பட்ட இரசாயனப்பொருட்களுள் எதனையும் தயாரித்தல், செய்முறைப்படுத்துதல் மற்றும் நுகர்தல் என்பவற்றில் ஈடுபட்டுள்ள இரசாயனத்தொழிலி லுள்ள ஆளொருவர்.

(3) குழுவின் உறுப்பினர்கள், அமைச்சரினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறாக, ஒவ்வோர் அமர்வுக்கும் அத்தகைய ஊதியத்தை அல்லது படிகளைப் பெறலாம்.

குழுவின் கூட்டங்கள்.

**10.** (1) குழுவின் கூட்டங்கள், ஆகக்குறைந்தது இரண்டு மாதங் களுக்கு ஒருதடவையாவது நடாத்தப்படுதல் வேண்டும்

(2) குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண், அதற்கென ஆக்கப்படும் விதிகளின்மூலம் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

(3) செயலாளர், அல்லது அவரில்லாதிருப்பின் சமுகமளித் துள்ள உறுப்பினர்களினால் தெரிவுசெய்யப்படும் அலுவல ரொருவர், குழுவின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும்.

அதிகார சபையின் பணிகள்.

**11.** அதிகாரசபையின் பணிகள் பின்வருமாறாதல் வேண்டும் :-

(அ) இச்சட்டத்துக்கான I ஆம், II ஆம், III ஆம் அட்டவணை களில் குறித்துரைக்கப்படும் நச்சுத்தன்மை இரசாயனப் பொருட்கள் தொடர்பில் சமவாயத்தின் பரப்பெல்லை யினுள் ஒழுங்குபடுத்துகை விதிமுறை யொன்றை நடைமுறைப்படுத்துதல் ;

(ஆ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியேயிருந்து விசேடத்துவமுள்ளவர்களினதும் நிபுணர்களினதும் மதியுரையை அல்லது சேவைகளை நாடுதல் ;

(இ) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் சமவாயத்தின் கீழான கடப்பாடுகளை நிறைவேற்றுதல் ; அத்துடன்

(ஈ) சமவாயத்தின் VII ஆம் உறுப்புரையைப் பின்பற்றி, (இதனகத்துப்பின்னர் "இஆதஒ" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்

வதற்கான ஒழுங்கமைப்புடனும் ஏனைய அரசாம் திறத்தவர்களுடனும் பயனுள்ள இணைப்புக்கான தேசிய நோக்கிடமாகச் சேவையாற்றுதல்.

*அதிகாரசபையின் தத்துவங்கள்.*

**12.** (1) அதிகாரசபையின் தத்துவங்கள் பின்வருமாறாதல் வேண்டும் :-

(அ) (i) இச்சட்டத்துக்கான I ஆம், II ஆம், III ஆம் அட்டவணைகளிற் குறித்துரைக்கப்பட்ட நச்சுத் தன்மைய இரசாயனப்பொருட்களையும், அட்டவணைப்படுத்தப்படா தனித்துவ அமைப்பியல்சார் இரசாயனப் பொருட்களையும் அல்லது அவற்றைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் தயாரிப்புச் செயலிடங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கான உரிமமளித்தல் மற்றும் அனுமதிப்பத்திரத் திட்டத்தை நிருவகிக்கும் ; அத்துடன்

(ii) தேசியப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றை அபிவிருத்தி செய்வதில் இயைபான அதிகாரிகளுக்கு உதவிபுரியும், மற்றும் அதன் முன்னேற்றம் பற்றிக் காலத்துக்குக்காலம் இஆத ஒழுங்கமைப்புக்குத் தெரிவிக்கும் நோக்குடன் ஏனைய இயைபான அரசாங்கத் திணைக்களங்களுடனும் நிறுவனங்களுடனும் ஒருங்கிணைதல் ;

(ஆ) இச்சட்டத்தையும் அதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளையும் நடைமுறைப்படுத்தலைக் கண்காணித்தல் ;

(இ) வழக்கமுறையான தொழிற்பரிசோதனைகளை வசதிப்படுத்துதல் ;

(ஈ) ஏனைய இயைபான அரசாங்க உருவகங்களுடன் ஊடாடிச் செயலாற்றுதலும், இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அதிகாரசபைக்குக் குறித்தளிக்கப்படுகின்றவாறான அத்தகைய பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுதலும் ;

(உ) இச்சட்டத்தின்கீழான ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு இயைபான கருமங்கள்மீது அமைச்சருக்கு மதியுரையளித்தல் ;

(ஊ) அமைச்சரினால் குறித்தளிக்கப்படும் வேறெவையேனும் பணிகளைப் புரிதல் ; அத்துடன்

(எ) (அ) முதல் (ஈ) வரையிலான பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட பணிகளுள் எவற்றினதும் புரிகைக்கு

இடைநேர்விளைவான அல்லது உகந்ததான எதனையும் செய்தல்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அதிகாரசபையானது-

(அ) சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகு தலைக் கண்காணித்தல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டத்துக்கான I ஆம், II ஆம், III ஆம் அட்டவணைகளில் குறித்துரைக்கப்பட்ட இரசாயனப் பொருட்களின் அல்லது முற்பொருட்களின் அபிவிருத்தி, தயாரிப்பு, செய்முறைப்படுத்துகை, நுகர்வு, கைமாற்றம், இறக்குமதி, ஏற்றுமதி அல்லது பயன்பாடு என்பவற்றை ஒழுங்குபடுத்துதலும் கண்காணித்தலும் வேண்டும் ;

(இ) இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துதல் அல்லது பயன்படுத்துவதற்கு அச்சுறுத்தல் என்பவற்றைக் கெதிராக, X ஆம் உறுப்புரையின்கீழ் உதவிக்காகவும் பாதுகாப்புக்காகவும் அரசாம் திறத்தவரொருவருக்கு வேண்டுகோளொன்று விடுத்தலும், அல்லது அரசாம் திறத்தவரொருவரின் வேண்டுகோளுக்கு இணங்கு தலும் வேண்டும் ;

(ஈ) காலாகாலப்பரிசோதனையை அல்லது சவால் பரிசோத னையை செய்தலும் அல்லது போர்முறையொன்றாக இரசாயன ஆயுதங்களை அல்லது கலகக் கட்டுப்பாட்டு இரசாயன உபகரணங்களைப் பயன்படுத்துதல் பற்றி நுண்ணாய்வு செய்தலும் வேண்டும் ;

(உ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பரிசோதனைகளை நடாத்துதலும் ;

(ஊ) சவால் பரிசோதனைகளுக்காக இலங்கையின் வேண்டு கோளை ஏற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்துதலும் அல்லது இலங்கைக்கெதிராக இஆத ஒழுங்கமைப்புக்கு ஏதேனும் அரசாம் திறத்தவரினால் செய்யப்படும் ஏதே னும் அலைக்கழிக்கும் அல்லது அவதூறான வேண்டு கோளை எதிர்க்கும் நோக்குடன் இஆத ஒழுங்கமைப் புடன் ஊடாடிச் செயலாற்றுதல் வேண்டும் ;

(எ) இஆதஒ பரிசோதகர்களின் நிரலை நுனித்தாராய் தலும் திருப்திப்படின், ஏற்றுக்கொள்ளுதலும், பரிசோதிக்கும் அமைவிடத்தின்மீது பரிசோதனைக் குழுவொன்றினால் கொண்டுவரப்படும் அங்கீகரிக்கப் பட்ட சாதனங்களைச் சரிபார்த்தலும் வேண்டும் ;

(ஏ) சட்டத்தின்கீழ் அதிகாரசபையினாற் சேகரிக்கப்படும் அல்லது பெறப்படும் அந்தரங்கத் தகவலினதும் தொழினுட்பவியலினதும் அந்தரங்கத் தன்மையை உறுதிப்படுத்துதலும் இரகசியத்தைப் பேணுதலும் வேண்டும் ;

(ஐ) அத்தகைய தகவல் சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்குத் தேவைப்படக்கூடிய வாறானதென நம்புவதற்கு அதிகாரசபைக்கு நியாய மான காரணமுள்ளவிடத்து அத்தகைய தகவலை எவரேனுமாளிடமிருந்து கோருதல் வேண்டும் ;

(ஒ) 17 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் பரிசோதகர் களுக்குப் பயிற்சி வழங்குதல் வேண்டும் ;

(ஓ) நச்சுத்துத்தன்மை இரசாயனப்பொருட்களை அல்லது முற்பொருட்களைக் கையாளுகின்ற ஆய்வுகூடங்களி டையே அறிவியல்சார் மற்றும் தொழினுட்ப வியல்சார் தகவலின் பரிமாற்றத்தை ஒருங்கிணைத்தல் வேண்டும்;

(ஔ) சமவாயத்தின்கீழ் தடைசெய்யப்படாத நோக்கங்களுக் காக இரசாயனப்பொருட்களைத் தயாரிப்பதற்காக, செய்முறைப்படுத்துவதற்காக அல்லது பயன்படுத்து வதற்காக, அறிவியல்சார் மற்றும் தொழினுட்பத் தகவல், இரசாயனப்பொருட்கள், சாதனங்கள் என்பனவற்றின் சர்வதேசப் பரிமாற்றத்தை வசதிப் படுத்துதல் வேண்டும் ;

(க) சமவாயத்தின்கீழ் தடைசெய்யப்படாத நோக்கங்களுக் காக ஆளொருவர் எந்நேரத்திலும் தயாரிக்கக்கூடிய, கொள்ளக்கூடிய, வைத்திருக்கக்கூடிய, கைமாற்றக் கூடிய அல்லது பயன்படுத்தக்கூடிய இச்சட்டத்துக் கான I ஆம், II ஆம், III ஆம் அட்டவணைகளில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் இரசாயனப்பொருளின் அல்லது முற்பொருளின் அளவைக் காலத்துக்குக் காலம் தீர்மானித்தல் வேண்டும் ; அத்துடன்

(ங) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங் களைப் பிரயோகிக்கையிலும் அதன் பணிகளைப் புரிகையிலும் அமைச்சரின் பொதுவான பணிப்புக்கு அமைந்ததாதல் வேண்டும்.

*அதிகார சபையானது வெளிப்படுத்து கைகளை இஆத ஒழுங்கமைப்பிடம் சமர்ப்பித்தல்.*

**13.** அதிகாரசபையானது, I ஆம், II ஆம், III ஆம் அட்டவணை களில் நிரற்படுத்தப்பட்ட நச்சுத்தன்மைய இரசாயனப்பொருட்கள் அல்லது முற்பொருள் தொடர்பான அத்தகைய தொடக்க, வருடாந்த மற்றும் வேறு காலாகால வெளிப்படுத்துகைகளை அல்லது சமவாயத்தின்கீழ் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப் படும் வேறேதேனும் வெளிப்படுத்துகையைத் தயாரித்தல் வேண்டு மென்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகைகளைச் சமவாயத்தின் கீழ் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்தில் அல் லது நேரங்களில் இஆத ஒழுங்கமைப்பிடம் சமர்ப்பித்தலும் வேண்டும்.

*அமைச்சரானான பணிப்பு.*

**14.** அமைச்சர், காலத்துக்குக்காலம், இச்சட்டத்துக்கான I ஆம், II ஆம், III ஆம் அட்டவணைகளிற் குறித்துரைக்கப்படும் நச்சுத் தன்மை இரசாயனப்பொருட்கள் மீதான பொதுக்கொள்கை மற்றும் அவர் தோதானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு கருமங்கள் தொடர்பாக அதிகாரசபைக்குப் பணிப்புக்களை விடுக்கலாமென்பதுடன், அத்தகைய பணிப்பு களுக்கு இணங்கியொழுகுதல் அதிகாரசபையின் கடமையாதலும் வேண்டும் :

ஆயின், அமைச்சர், வேறெவரேனும் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படும் விடயங்கள் அல்லது பணிகள் சம்பந்தமான வேறேதேனும் கருமம் தொடர்பாக இப்பிரிவின்கீழான பணிப்பு களை வழங்குகையில், அவ்வமைச்சரின் கலந்தாலோசனையுடன் செயலாற்றுதல் வேண்டும்.

*அமைச்சுக்கு அதிகாரசபை தகவலளித்தல்.*

**15.** அதிகாரசபையானது, அதன் தொழிற்பாடுகள் தொடர் பாக அமைச்சர் தேவைப்படுத்தக்கூடியவாறான ஏதேனும் தகவலை அமைச்சருக்கு அளிக்கலாம்.

*தகவல் முதலியன கோருவதற்கு அதிகார சபைக்குள்ள தத்துவம்.*

**16.** *(1)* அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அதிகாரசபையானது, பொதுவான அல்லது விசேடமான கட்டளைமூலம், அதிகார சபையினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்களுடன், இச்சட்டத்துக்கான I ஆம், II ஆம், III ஆம் அட்டவணைகளில் நிரற்படுத்தப்பட்ட இரசாயனப்பொருட்கள் அல்லது முற்பொருள் அத்துடன் அட்டவணைப்படுத்தப்படா தனித்துவ அமைப்பியல்சார் இரசாயனப்பொருட்கள் இரசாயன

ஆயுதங்கள், இரசாயன ஆயுதங்கள் தயாரிப்புச் செயலிடங்கள் மற்றும் கலகக் கட்டுப்பாட்டு இரசாயன உபகரணங்கள் என்பன சம்பந்தமான ஏதேனும் தகவலை, வெளிப்படுத்துகையை அல்லது விபரத்திரட்டை, காலத்துக்குக்காலம் அல்லது தேவைப்படுகின்றவாறும், தேவைப்படுகின்றபோதும், கொடுத்துதவும்படி எவரேனும் இறக்குமதியாளரை, ஏற்றுமதியாளரை, வழங்குநரை, அரசாங்க அல்லது தனியார் நிறுவனத்தை அல்லது ஒழுங்கமைப்பை அல்லது ஆளைக் கோரலாம்.

(2) ஆளெவரும், நிறுவனமெதுவும் அல்லது ஒழுங்கமைப்பெதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகும்போது, பொய்யானதென அல்லது ஏதேனும் முக்கிய விபரத்தில் தவறானதென அத்தகைய ஆள் அல்லது நிறுவனம் அல்லது அமைப்பு அறிந்துள்ள, அல்லது நம்புவதற்கு நியாயமான காரணமுள்ள ஏதேனும் தகவலை அளித்தலாகாது அல்லது ஏதேனும் வெளிப்படுத்துகையை, விபரத்திரட்டை அல்லது கூற்றைக் கொடுத்துதவுதலாகாது.

**17.** (1) இச்சட்டத்தின் நோக்கத்துக்காகப் பரிசோதகரொருவராக இருப்பதற்கு, அதிகாரசபையானது, பெயர்மூலம் அல்லது பதவிமூலம் அதிகாரசபையின் எவரேனும் அலுவலரை அல்லது சேவையாளரை நியமிக்கலாம்.

*பரிசோதகரை நியமித்தல்.*

(2) அதிகாரசபையானது, காலத்துக்குக்காலம், ஒரு பரிசோதகராகப் பணியாற்றுவதற்கு வேறெவரேனும் அரசாங்க அலுவலரை எழுத்தில் நியமிக்கலாம்.

(3) அதிகாரசபையானது, பரிசோதகரொருவராக நியமன சான்றிதழொன்றை (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் நியமிக்கப்படும் ஒவ்வொரு பரிசோத கருக்கும் கொடுத்துதவுதல் வேண்டும். அத்தகைய சான்றிதழ், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் விதிகளினால் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு தேவைப்படுத்தப்படின், ஏதேனும் தாபனத்தினுள், அத்தாபனத்தின் குடியிருப்பாளருக்கு அல்லது பொறுப்புள்ள முகாமைப்பதவியை வகிக்கின்ற ஆளுக்குப் பரிசோதகரினால் காண்பிக்கப்படுதலும் வேண்டும்.

பரிசோதகரின் தத்துவங்கள்.

**18.** (1) அதற்கென ஆக்கப்படும் எவையேனும் விதிகளுக் கமைய, பின்வரும் செயல்கள் எல்லாவற்றையும் அல்லது அவற் றுள் எவற்றையும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காக, செய்வதற்குப் பரிசோதகரொருவர் தத்துவமுடையவராதல் வேண்டும் :-

(அ) பகலில் அல்லது இரவில் நியாயமான எல்லா நேரங் களிலும் ஏதேனும் வளவுகளினுள் அல்லது செயலிட மொன்றினுட் பிரவேசித்தலும் தேடுகையிடுதலும் ;

(ஆ) ஏதேனும் வளவில் அல்லது செயலிடத்தில் காணப்படும் ஒரு பருப்பொருளை அல்லது பொருளைப் பரிசோதித்தல் அல்லது சோதித்தல் ;

(இ) ஏதேனும் வளவில் அல்லது செயலிடத்தில் காணப்படும் ஒரு பருப்பொருளின் அல்லது பொருளின் மாதிரிகளை எடுத்தல் ;

(ஈ) ஏதேனும் வளவில் அல்லது செயலிடத்தில் காணப் படும் ஒரு பருப்பொருளை அல்லது பொருளை அளவிடுதல் ;

(உ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுக்கு அல்லது ஓர் அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க வைத்திருக்கப்படும் பதிவேடொன்று உட்பட ஆவண மொன்றைச் சோதித்தல் ;

(ஊ) ((உ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட வகையினதான பதிவேடொன்று உட்பட) ஆவண மொன்றிலிருந்து பொழிப்புகளை எடுத்தல், அல்லது அதன் பிரதிகளைத் தயாரித்தல், அல்லது எவ்வழி வகைகள்மூலம் ஏதேனும் பருப்பொருளின் அல்லது பொருளின் தோற்றப் பொருட்களைத் தயாரித்தல் ;

(எ) ஏதேனும் சாதனத்தைச் சேதத்தை ஏற்படுத்தாமல் அதனைத் தொழிற்படுத்த முடியுமென, நியாயமான ஏதுக்களின் மீது பரிசோதகர் நம்பினால், வளவுகளில் அல்லது செயலிடத்தில் அமைந்துள்ள, இலத்திரனியற் சாதனம் உட்பட, அச்சாதனத்தைத் தொழிற்படுத்துதல் ;

(ஏ) மேலேயுள்ள பந்திகளுள் எவற்றின்கீழுமான ஒரு தத்துவத்தைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக நியாயமான முறையில் தேவைப்படுகின்ற ஏதேனும் சாதனத்தை அல்லது பொருளை ஏதேனும் வளவுகளினுள் அல்லது செயலிடத்தினுள் எடுத்துச் செல்லுதல் ;

(ஐ) அமைவிடத்தில் வேலை செய்கின்ற ஆளணியினரை வினவுதல் ; அத்துடன்

(ஒ) ஒரு பரிசோதனையை நிறைவேற்றுவதற்குச் செய்வது அவசியமாகவுள்ள அல்லது வசதியாகவுள்ள வேறேதேனும் செயலை அல்லது காரியத்தைச் செய்தல்.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ள தத்துவங்களுடன் சேர்த்து மேலதிகமாக, பரிசோதனைத் தத்துவமொன்றுக்கான ஒரு குறிப்பீடு, ஒரு பரிசோதகர் தொடர்பில், இச்சட்டத்தின்கீழ் ஆற்றப்பட்ட தவறொன்று தொடர்பாகச் சான்றாகவுள்ள விடயமெனப் பரிசோதகர் நியாயமான ஏதுக்களின்மீது நம்புகின்ற ஏதேனும் பதார்த்தத்தைக் கைப்பற்றித் தடுத்துவைப்பதற்கான தத்துவமொன்றையும் உள்ளடக்கும்.

(3) ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ). (ஈ) மற்றும் (எ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட தத்துவங்களானவை,—

(அ) அதிகாரசபையின் தவிசாளர் அல்லது பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் மட்டும் ; அத்துடன்

(ஆ) வளவுகளில் அல்லது செயலிடத்தில் ஏற்புடையதான ஏதேனும் பாதுகாப்பு நடவடிக்கைமுறைக்கு இணங்க மட்டும்,

25 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் பரிசோதகரால் நியாயமான ஏதுக்கள்மீது, பிரயோகிக்கப்படலாம்.

(4) ஏதேனும் வளவின் அல்லது செயலிடத்தின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் அவரது முகவர்கள் அத்துடன் சேவையாளர்கள், எல்லா நேரங்களிலும், பரிசோதகரொருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழான அவரது தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்கு அவசியமானவையான அவரினால் தேவைப்படுத்தப்படும் வழிவகைகளை அல்லது வசதிகளைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

## பாகம் III

## இரசாயன ஆயுதங்களையும் நச்சுத்தன்மைய இரசாயனப் பொருட்களையும் தடைசெய்தலும் ஒழுங்குபடுத்துதலும்

*இரசாயன ஆயுதங்களை அபிவிருத்தி செய்தல், தயாரித்தல், கொள்ளுதல் முதலியவற்றைத் தடைசெய்தல்.*

**19.** (1) (அ) இரசாயன ஆயுதமொன்றைப் பயன்படுத்துகின்றவரான ;

(ஆ) இரசாயன ஆயுதமொன்றை அபிவிருத்தி செய்கின்றவரான அல்லது தயாரிக்கின்றவரான ;

(இ) இரசாயன ஆயுதமொன்றைக் கொள்ளுகின்றவரான, தொகைக்குவிக்கின்றவரான அல்லது வைத்திருக்கின்றவரான ;

(ஈ) ஏதேனும் இரசாயன ஆயுதத்தை இன்னோராளுக்கு, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கைமாற்றுகின்றவரான ;

(உ) இரசாயன ஆயுதமொன்றைப் பயன்படுத்துவதற்கான எவையேனும் இராணுவ ஆயத்தங்களில் ஈடுபடுகின்றவரான ;

(ஊ) ஏதேனும் தடைசெய்யப்பட்ட செயற்பாட்டை அறிந்துகொண்டு உதவுகின்றவரான, ஊக்குவிக்கின்றவரான அல்லது தூண்டுகின்றவரான ; அல்லது

(எ) போர்முறையொன்றாக ஏதேனும் காலக்கட்டுப்பாட்டு இரசாயன உபகரணத்தைப் பயன்படுத்துகின்றவரான ;

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், இருபதாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையினாலும், ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினாலும் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ள தடையானது இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் அதிகாரத்தின்கீழ் இரசாயன ஆயுதங்கள் அழித்துவிடப்படும் வரை, 17 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பரிசோதகரொருவரினால், அல்லது சர்வதேசப் பரிசோதகரொருவரினால் அத்தகைய ஆயுதங்கள் வைத்திருக்கப்படுவதற்கு அல்லது உடைமையில் வைத்திருக்கப்படுவதற்கு ஏற்புடையதாதலாகாது.

(3) ஒரு சாமான் தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ) அல்லது (எ) என்னும் பந்திகளின்கீழான தவறொன்றுக்கான வழக்கு நடவடிக்கைகளில், குற்றஞ்சாட்டப் பட்டவர் -

(அ) அச்சாமானானது விடயத்துக்கேற்ப, ஓர் இரசாயன ஆயுதமாக அல்லது கலகக் கட்டுப்பாட்டு இரசாயன உபகரணமாக இருந்ததெனத் தாம் அறிந்திருக்க வில்லை அல்லது சந்தேகிக்கவில்லை அல்லது சந் தேகிப்பதற்குக் காரணங்கொண்டிருக்கவில்லை என ; அல்லது

(ஆ) விடயத்துக்கேற்ப, அது ஓர் இரசாயன ஆயுதம் அல்லது கலகக் கட்டுப்பாட்டு இரசாயன உபகரணம் என அவர் முதன்முதலாக அறிந்தபின்னர் அல்லது சந்தேகித்த பின்னர், நியாயமாகச் செயல்முறைக்குகந்த வாறு விரைவாக, அவர் அறிந்தமை அல்லது சந்தேகித்தமை பற்றி அதிகாரமளிக்கப்பட்ட அலுவல ரொருவருக்கு அறிவிப்பதற்கான எல்லா நியாயமான நடபடிகளையும் தாம் எடுத்தார் என,

எண்பிப்பது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிர்வாதமொன்றாக வுள்ளது.

*(4)* மூன்றாம் உட்பிரிவிலுள்ளதெதுவும், இப்பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவரினால் எழுப்பப்படுவதற்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள ஏதேனும் எதிர்வாதத்தைப் பங்கப்படுத்துதலாகாது.

*நச்சுத் தன்மை இரசாயனப் பொருளை அல்லது முற்பொருளை அபிவிருத்தி செய்தல், தயாரித்தல், கொள்ளுதல் முதலியன வற்றுக்கான தடைகள்.*

**20.** ஆளெவரும் -

(அ) அரசாம் திறத்தவர்களின் ஆள்புலன்களுக்கு வெளியே, இச்சட்டத்துக்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்படுவதான நச்சுத்தன்மை இரசாயனப் பொருளொன்றை அல்லது முற்பொருளொன்றை அபிவிருத்தி செய்தலோ, தயாரித்தலோ, கொள்ளுதலோ, வைத்திருத்தலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது என்பதுடன், அத்தகைய இரசாயனப் பொருளை அல்லது முற்பொருளை இன்னுமோர் அரசாம் திறத்தவருக்குத் தவிர இலங்கையின் ஆள்புலத்துக்கு வெளியே கைமாற்றுதலுமாகாது ;

(ஆ) அதிகாரசபையிடமிருந்து அனுமதி பெறாமலும்,—

(i) இச்சட்டத்துக்கான I ஆம் அட்டவணையில் நிரற்படுத்தப்பட்ட நச்சுத்தன்மைய இரசாயனப் பொருட்கள் அல்லது முற்பொருட்கள், ஆராய்ச்சி, மருத்துவ, மருந்தாக்கல் அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டி இருந்தாலொழியவும் ; அத்துடன்

(ii) நச்சுத்தன்மைய இரசாயனப்பொருட்களின் அல்லது முற்பொருட்களின் வகைகள், (i) ஆம் உட்பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கங் களைக் குறிப்பீடுசெய்து நியாயப்படுத்தமுடியு மானவற்றுக்குக் கண்டிப்பாக வரையறுக்கப்பட் டிருந்தாலொழியவும், அத்தகைய நோக்கங்களுக் கான அத்தகைய நச்சுத்தன்மைய இரசாயனப் பொருட்களின் அல்லது முற்பொருட்களின் அளவுகள், அதிகாரசபையினால் தீர்மானிக்கப் பட்டவாறான வரையறைகளை எந்நேரத்திலும் விஞ்சாதிருந்தாலொழியவும்,

இச்சட்டத்துக்கான I ஆம் அட்டவணையில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் நச்சுத்தன்மைய இரசாயனப்பொருட்களை அல்லது முற்பொருட்களைத் தயாரித்தலோ, கொள்ளுதலோ, வைத்திருத் தலோ, கைமாற்றுதலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது ;

(இ) இச்சட்டத்துக்கான I ஆம் அட்டவணையில் நிரற்படுத்தப்பட்ட நச்சுத்தன்மைய இரசாயனப் பொருட்களை அல்லது முற்பொருட்களை இலங்கைக்கு வெளியேயுள்ள இன்னுமோர் அரசாம் திறத்தவருக்கு,—

(i) (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகவன்றியும் ; அத்துடன்

(ii) சமவாயத்துக்கான சரிபார்த்தற் பின்னிணைப்பின் VI ஆம் பாகத்தில் தரப்பட்டுள்ள நடவடிக்கைமுறைக்கிணங்கவன்றியும்,

கைமாற்றுதலாகாது ;

ஆயின், இப்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நச்சுத்தன்மைய இரசாயனப்பொருட்கள் அல்லது முற்பொருட்கள் எவையும் ஏதேனும் மூன்றாம் அரசுக்கு மீளக்கைமாற்றப்படுதலாகாது.

(ஈ) இச்சட்டத்துக்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் நச்சுத்தன்மைய இரசாயனப்பொருட்களை அல்லது முற்பொருட்களை சமவாயத்திற்கு திறத்தவரொருவராக இல்லாத அரசொன்றின் ஏதேனும் அமைப்புக்கு அல்லது அமைப்பிலிருந்து கைமாற்றுதலாகாது.

*ஏற்றுமதி அல்லது இறக்குமதி (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்திற்கிணங்கச் செய்யப்படுதல்.*

**21.** (1) ஆளெவரும், இச்சட்டத்துக்கான I ஆம், II ஆம், III ஆம் அட்டவணைகளில் நிரற்படுத்தப்பட்ட இரசாயனப்பொருளொன்றை அல்லது முற்பொருளொன்றை அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு தவிரவும், (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கவன்றியும், இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்தலோ, அல்லது இலங்கைக்குள் இறக்குமதி செய்தலோ ஆகாது.

(2) இச்சட்டத்தின்கீழான அட்டவணைகள் I, II மற்றும் III இல் வரிசைப்படுத்தப்பட்ட ஏதேனும் இரசாயனப்பொருளை அல்லது முற்பொருளை இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்வதற்கான விண்ணப்பமொன்று இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளருக்குச் செய்யப்படும்போது அவர் அதனை, நிபந்தனைகளுடனோ அல்லது நிபந்தனைகளில்லாமலோ ஆன அங்கீகாரத்துக்கென அதிகாரசபைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

*கைப்பற்றப் படுதலும் இழப்பிக்கப் படுதலும்.*

**22.** அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனப்பொருளொன்று தொடர்பில் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் மீறுகை அல்லது மீறுகைக்கான எத்தனம் இருக்குமாயின், அத்தகைய இரசாயனப்பொருள், அது சட்டமுறையற்ற வகையில் இலங்கையினுள் இறக்குமதிசெய்யப்படும் தடைசெய்யப்பட்ட இறக்குமதியொன்று என்றாற்போன்று, சுங்கக்கட்டளைச் சட்டத்தின்கீழ் (235 ஆம் அத்தியாயமான) கைப்பற்றப்படுவதற்கும் இழப்பிக்கப்படுவதற்கும் உட்பட்டதாதல் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழான தவறுகளை மேல்நீதிமன்றம் விளங்குதல்.*

**23.** கொழும்பில் நடைபெறும் இலங்கை மேல்நீதிமன்றம் அல்லது அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட கொழும்பில் நடைபெறும் மேல்மாகாணத்துக்கான மேல்நீதிமன்றம், வேறேதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப் பினும், இச்சட்டத்தின்கீழான தவறுகளைக் கேட்பதற்கும், விளங்குவதற்கும், தண்டிப்பதற்கும் புறநீங்கலான நியாயாதிக் கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் IV

## தயாரிப்பாளர்களாக பயன்பாட்டாளர்களாக ஆட்களைப் பதிவுசெய்தல்

*ஏதேனும் நச்சுத்தன்மை இரசாயனப் பொருளின் அல்லது முற்பொருளின் தயாரிப்பு முதலிய வற்றில் ஈடுபட்டுள்ள ஆட்களைப் பதிவுசெய்தல்.*

**24.** (1) இச்சட்டம் தொடங்கிய பின்னர், ஆளெவரும் இச் சட்டத்துக்கான I ஆம், II ஆம், III ஆம் அட்டவணைகளில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் நச்சுத்தன்மைய இரசாயனப் பொருளை அல்லது முற்பொருளைத் தயாரிப்பதற்கு, செய்முறைப் படுத்துவதற்கு, கொள்ளுவதற்கு, நுகர்வதற்கு, கைமாற்றுவதற்கு, இறக்குமதி செய்வதற்கு, ஏற்றுமதி செய்வதற்கு அல்லது பயன் படுத்துவதற்கு அல்லது ஏதேனும் அட்டவணைப்படுத்தப்படா தனித்துவ அமைப்பியல்சார் இரசாயனப்பொருளைத்தயாரிப்பதற்கு அத்தகைய ஆள், விடயத்துக்கேற்ப, ஏதேனும் நச்சுத்தன்மைய இரசாயனப்பொருளின் அல்லது முற்பொருளின் ஒரு அபிவிருத்தி யாளராக தயாரிப்பாளராக, செய்முறைப்படுத்துநராக, கொள்ளு தல் செய்பவராக, நுகர்பவராக, கைமாற்றுபவராக, இறக்குமதி யாளராக, ஏற்றுமதியாளராக அல்லது பயன்பாட்டாளராக அல் லது ஏதேனும் அட்டவணைப்படுத்தப்படா தனித்துவ அமைப்பியல்சார் இரசாயனப்பொருளின் தயாரிப்பாளரொரு வராக அவரது பெயரைப் பதிவுசெய்துகொள்வதற்காக அதிகார சபைக்கு விண்ணப்பித்திருந்தாலொழிய, தொழிலைத் தொடங்குதலாகாது.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுத்தெட்டாம் ஆண்டின் 4 ஆம் இலக்க, முதலீட்டுச் சபைச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் I ஆம், II ஆம், III ஆம் அட்டவணைகளில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் இரசாயனப் பொருளின் அல்லது முற்பொருளின் தயாரிப்பில், செய்முறைப் படுத்தலில், கொள்ளுதலில், நுகர்வில், கைமாற்றுதலில், இறக்குமதியில், ஏற்றுமதியில் அல்லது பயன்பாட்டில் ஈடுபட்டுள்ள அல்லது ஏதேனும் அட்டவணைப்படுத்தப்படா தனித்துவ அமைப்பியல்சார் இரசாயனப்பொருளின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஆளொவ்வொருவரும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள், விடயத்துக்கேற்ப, ஒரு தயாரிப்பாளராக, செய்முறைப்படுத்துநராக, கொள்ளுநராக, நுகர்பவராக, கைமாற்றுபவராக, இறக்குமதியாளராக, ஏற்றுமதி யாளராக அல்லது பயன்பாட்டாளராக, அல்லது ஏதேனும் அட்ட வணைப்படுத்தபடா தனித்துவ அமைப்பியல்சார் இரசாயனப் பொருளின் தயாரிப்பாளராக அவரது பெயரைப் பதிவுசெய்வதற் கான விண்ணப்பமொன்றை அதிகாரசபைக்குச் செய்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபைக்குச் செய்யப்படவேண்டிய விண்ணப்பப்படிவம், அத்தகைய விண்ணப்பப்படிவத்தில் அடக்கப்படவேண்டிய விபரங்கள், அத்தகைய விண்ணப்பம் செய்யப்படவேண்டியமுறை, அத்தகைய விண்ணப்பத்தின்மீது செலுத்தப்படற்பாலதான கட்டணம், பதிவுச்சான்றிதழின் படிவம், மற்றும் பதிவுச்சான்றித ழொன்றை அளிப்பதில் அல்லது இல்லாதாக்குவதில் பின்பற்றப் படவேண்டிய நடவடிக்கைமுறை என்பன, விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகையதாதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்பத்தைப் பெற்றதன்மேல், அதிகாரசபையானது, விண்ணப்பமானது விதித்துரைக்கப்படும் படிவத்திலிருப்பின், விண்ணப்பகாரரின் பெயரைப் பதிவுசெய்து அவருக்குப் பதிவுச்சான்றிதழொன்றை அளித்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நியதிகளின்படி அளிக்கப்படும் பதிவுச் சான்றிதழ், அதன்கண் குறித்துரைக்கப்படும் காலப்பகுதிக்குச் செல்லுபடியாதல் வேண்டுமென்பதுடன். அத்தகைய மேலதிகக் காலப்பகுதிக்காகவும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணக் கொடுப்பனவின்மீதும் காலத்துக்குக்காலம் புதுப்பிக்கவும்படலாம்.

*தகவல் வழங்குதலும் பதிவேடும்.*

**25.** (1) இச்சட்டத்துக்கான I ஆம், II ஆம், III ஆம் அட்டவணைகளில் ஏதேனும் இரசாயனப்பொருட்களை அல்லது அவற்றின் முற்பொருட்களின் அபிவிருத்தி தயாரிப்பு செய்முறைப்படுத்துகை, கொள்ளுகை, நுகர்வு, கைமாற்றுகை, இறக்குமதி, ஏற்றுமதி அல்லது பயன்பாட்டில் ஈடுபட்டுள்ள அல்லது ஏதேனும் அட்டவணைப்படுத்தப்படா தனித்துவ அமைப்பியல்சார் இரசாயனப் பொருளின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அத்துடன் 24 ஆம் பிரிவின் நியதிகளின்படி அதிகாரசபையில் பதிவுசெய்துள்ளதுமான எவரேனுமாள்,-

(அ) பின்வருவன தொடர்பாக, விதித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய கால இடைவெளிகளிலும், விதித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய விபரங்களை அதிகாரசபைக்கு அனுப்புதல் வேண்டும் :-

(i) விடயத்துக்கேற்ப, இரசாயனப்பொருட்களும் செயலிடமும் ;

(ii) இரசாயனப்பொருட்கள் எந்நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனவோ அந்நோக்கங்கள்; அத்துடன்

(iii) சமவாயத்தின்கீழ் இஆத ஒழுங்கமைப்புக்கு இலங்கையினால் கொடுக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் ஒரு வெளிப்படுத்துகைக்கு இயைபான அத்தகைய வேறு கருமங்கள் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக, (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இரசாயனப்பொருட்களும் செயலிடமும் தொடர்பாக அத்தகைய பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக, (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்படும் இரசாயனப்பொருட்களும் செயலிடமும் தொடர்பான அத்தகைய காலாகால அறிக்கைகளையும் அத்தகைய விசேட

அறிக்கைகளையும் அத்தகைய பதிவேடுகளிலிருந்து தயாரித்து அதிகாரசபைக்குக் கொடுத்தல் வேண்டும்.

(2) நியாயமான காரணமின்றி, (1) ஆம் உட்பிரிவிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற அல்லது பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் பதிவேடுகளை அல்லது அறிக்கைகளைத் தயாரிக்கின்ற, வைத்திருக்கின்ற அல்லது அனுப்புகின்ற எவரேனுமாள் இப்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அவ்விரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) பின்வருவன தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :-

(அ) அத்தகைய பதிவேடுகளின் படிவமும் உள்ளீடும் ;

(ஆ) அத்தகைய பதிவேடுகள் எக்காலப்பகுதிகளுக்குள்ளாக வைத்திருக்கப்படவேண்டுமோ அக்காலப்பகுதிகள் ;

(இ) வழங்கப்படவேண்டிய காலாகால அறிக்கைகளில் படிவமும் உள்ளீடும் ;

(ஈ) எச்சூழ்நிலைகளில் விசேட அறிக்கைகள் தேவைப்படுகின்றனவோ அச்சூழ்நிலைகளும், அத்தகைய விசேட அறிக்கைகளின் படிவமும் உள்ளீடும் ;

(உ) அத்தகைய காலாகால அறிக்கைகளும் விசேட அறிக்கைகளும் எக்காலத்தினுட் செயற்படவேண்டுமோ அக்காலம் ; அத்துடன்

(ஊ) அத்தகைய காலாகால அறிக்கைகளையும் விசேட அறிக்கைகளையும் கையொப்பமிடவேண்டிய ஆட்கள்.

## பாகம் V

### பரிசோதனை செய்தலும் தேடுகையிடுதலும், இழப்பித்தலும்

*பரிசோதனை.*

**26.** (1) பதினேழாம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் பரிசோதகர் ஒருவர் -

(அ) எவையேனும் வளவுகளைக் கட்டுப்படுத்துகின்ற ஆளின் சம்மதத்துடன் ; அல்லது

(ஆ) எவையேனும் வளவுகள் தொடர்பில் 35 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் ஆணைப்பத்திரமொன்றின்கீழ்,

அவ்வளவுகளினுட் பிரவேசித்து -

(i) இச்சட்டத்துக்கான I ஆம், II ஆம், III ஆம் அட்டவணைகளில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் நச்சுத்தன்மை இரசாயனப்பொருளின் அல்லது முற்பொருளின் தயாரிப்பு, செய்முறைப்படுத்துகை, கொள்ளுகை, நுகர்வு, கைமாற்றுகை, இறக்குமதி, ஏற்றுமதி அல்லது பயன்பாடு என்பவற்றில், அல்லது ஏதேனும் அட்டவணைப் படுத்தப்படா தனித்துவ அமைப்பியல்சார் இரசாயனப்பொருளின் உற்பத்தியில், ஈடுபட்டுள்ள எவரேனுமாளைப் பரிசோதனை செய்யலாம் ;

(ii) சமவாயத்துக்கான சரிபார்த்தற் பின்னிணைப்பில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, ஏதேனும் இரசாயன ஆயுதம் அமைந்துள்ள அல்லது இரசாயன ஆயுதத் தயாரிப்புச் செயலிடம் உளதாயுள்ள ஏதேனும் இடத்தை, பரிசோதனை செய்யலாம்.

(2) ஒவ்வொரு பரிசோதகரும் அல்லது பரிசோதனைக் குழுவும், அதிகாரசபையின் தவிசாளரினால் எழுத்தில் அதிகாரமளிக் கப்படுவதன்மேல்,-

(அ) இயைபான நிகழ்வுகளைத் தாபிக்கும் நோக்கத்துக்காக ஏதேனும் செயலிட ஆளணியினரை நேர்காண்பதற் கான உரிமையையும் ;

(ஆ) பரிசோதனையின்போது எழக்கூடிய ஐயப்பாடு சம்பந்தமான தெளிவுபடுத்துதல்களுக்காக வேண்டு கோள் விடுப்பதற்கான உரிமையையும் ;

(இ) பரிசோதனையின் நோக்கத்துக்காக இயைபான அத்த கைய ஆவணப்படுத்தல்களையும் பதிவேடுகளையும் காண்பிக்கும்படி கோருவதற்கான உரிமையையும் ;

(ஈ) பரிசோதிக்கும் அமைவிடத்தினுள் அமைந்துள்ள ஒரு சாமான் அல்லது கட்டிடம் தொடர்பான பிரச்சினை தீர்க்கப்படாதிருப்பின், அச்சாமானின் அல்லது கட்டிடத்தின் நிழற்படங்களைப் பிடிப்பதற்கான உரிமையையும் ;

(உ) மாதிரிகளைப் பெறுவதற்கும், அத்தகைய மாதிரி களின் அமைவிடத்திலான பகுப்பாய்வைச் செய்வதற்கு மான உரிமையையும் ; அத்துடன்

(ஊ) சமவாயத்தின்கீழ் வழங்கப்படுகின்றவாறான அத்தகைய வேறு உரிமைகளையும்,

கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பரிசோதகர் ஒருவர் அல்லது பரிசோதனைக்குழுவொன்று, சரிபார்த்தற் செயற்பாடுகளை நடாத்தும்போது, சமவாயத்துக் கான சரிபார்த்தற் பின்னிணைப்பின் II ஆம் பாகத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட சிறப்புரிமைகளையும் விடுபாட்டுரிமைகளையும் துய்த்தல் வேண்டும்.

சர்வதேசப் பரிசோதனை.

**27.** சர்வதேசப் பரிசோதகர் ஒருவர் -

(அ) எந்த வளவுகள் தொடர்பில் சமவாயத்துக்கான சரிபார்த்தற் பின்னிணைப்பின் ஏதேனும் ஏற்பாடு ஏற்புடையதாகவுள்ளதோ அந்த எவையேனும் வளவு களின்மீது ; அல்லது

(ஆ) சமவாயத்தின் IX ஆம் உறுப்புரையின் 8 ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அமைவிடத்திலான சவால் பரிசோதனைக்கு அமைந்ததாகவுள்ள எவையேனும் வளவுகளின்மீது ; அல்லது

(இ) சமவாயத்தின் X ஆம் உறுப்புரையின் 9 ஆம் பந்தியின் கீழ் எந்த வளவுகள் தொடர்பில் நுண்ணாய்வொன்று தொடங்கப்பட்டுள்ளதோ அந்த எவையேனும் வளவுகளின்மீது,

கட்டுப்பாடுடையவரான ஆளின் சம்மதத்துடன், வளவுகள் தொடர்பில் 35 ஆம் பிரிவில் வழங்கப்பட்ட ஆணைப் பத்திரத்தின்கீழ் -

(i) ஏதேனும் அத்தகைய வளவுகளினுட் பிரவேசிக்கலாம் ;

(ii) சமவாயத்தையும், ஏதேனும் செயலிடத்தின் விடயத்தில், ஏற்புடையற்பாலதான ஏதேனும் செயலிட உடன்படிக் கையையும் பின்பற்றி அவ்வளவுகளைப் பரிசோதனை செய்யலாம் ; அத்துடன்

(iii) சமவாயத்திலும், ஏதேனும் செயலிடத்தின் விடயத்தில், ஏதேனும் ஏற்புடைத்தற்பாலதான செயலிட உடன்படிக் கையிலும் உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் பணியையும், வழங்கப்பட்ட தத்துவத்தையும், பரிசோதனை சம்பந்த மாகப் பிரயோகிக்கலாம்.

சர்வதேசப் பரிசோதகர்களுடன் சேர்ந்து வரவேண்டிய ஆட்கள்.

**28.** (1) சர்வதேசப் பரிசோதகரொருவரினாலான பரிசோதனை யொன்றை வசதிப்படுத்தும் நோக்கத்துக்காக, அவர், பின்வரும் அலுவலர்களுள் ஒருவருடன் அல்லது இருவருடனும் சேர்ந்து வருதல் வேண்டும் :—

(அ) அவதானிப்பாளரொருவர் ;

(ஆ) பரிசோதகரொருவர்.

(2) பதினெட்டாம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பரிசோதனை யொன்றை வசதிப்படுத்தும் நோக்கங்களுக்காக, பரிசோதகரொருவர் ஏதேனும் பரிசோதனைத் தத்துவத்தைப் பிரயோகிக்கலாம்.

(3) இப்பிரிவில் "அவதானிப்பாளர்" என்பது, சமவாயத்தின் IX ஆம் உறுப்புரையின் 12 ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அவதானிப்பாளரொருவர் என்று பொருளாகுமென்பதுடன், பரிசோதனையை அவதானிப்பதற்கு அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்படும் எவரேனுமாளையும் உள்ளடக்கும்.

ஆளடையாளச் சான்றிதழ்.

**29.** அதிகாரசபையானது, ஒவ்வொரு பரிசோதகருக்கும் சர்வ தேசப் பரிசோதகருக்கும், விடயத்துக்கேற்ப, அவரை அத்தகைய பரிசோதகராக அல்லது சர்வதேசப் பரிசோதகராக ஆளடையாளங் காணுகின்ற சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

குறித்த சில செயல்கள் தவறொன்றாக அமைதல்.

**30.** எவரேனுமாள், வேண்டுமென்று,—

(அ) சமவாயத்துக்கான சரிபார்த்தற் பின்னிணைப்புக் கிணங்கப் பரிசோதனையொன்றை நடாத்துவதனை வசதிப்படுத்தும் நோக்கத்துக்காக, பரிசோதகரினால் அல்லது பரிசோதனைக் குழுவினால் விடுக்கப்படும் வேண்டுகோளொன்றுக்கு இணங்கியொழுகுவதற்கு நியாயமான காரணமின்றி மறுத்தால் ;

(ஆ) பரிசோதனையை நடாத்துவதில் பரிசோதனைக் குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு, பரிசோதகருக்கு, அல்லது அவதானிப்பாளருக்குத் தாமதமேற்படுத்தினால் அல்லது முட்டுக்கட்டையிட்டால் ;

(இ) பரிசோதகரினால் அல்லது பரிசோகனைக் குழுவினால் நிறுவப்படும் களத்திலான ஏதேனும் கருவியின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சாதனத்தின் தொழிற்பாட்டைப் பங்கமானமுறையில் பாதிக்கும் உட்கருத்துடன் அத்தகைய கருவியை அல்லது சாதனத்தை அகற்றினால் அல்லது அதனோடு தலையிட்டால்,

அவர், இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*மாதிரிகளின் பகுப்பாய்வு.*

**31.** (1) பரிசோதகரொருவர் அல்லது பரிசோதனைக் குழுவொன்று, ஓர் இரசாயனப் பொருளின் மாதிரியொன்றைப் பெறுவதன்மேல், அதிகாரமளிக்கப்படும் பகுப்பாய்வாளரொருவரினால் அதனைப் பகுப்பாய்வு செய்விப்பதற்கான அவரது அல்லது அதன் உட்கருத்துப்பற்றி எவையேனும் வளவுகளின் கட்டுப்பாட்டையுடைய ஆளுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அம்மாதிரியை இரு சமபாகங்களாக உடனடியாகப் பிரித்தலும் அதன் தன்மை அனுமதிக்கின்ற அத்தகைய முறையில் ஒவ்வொரு பாகத்தையும் அடையாளமிடுவித்தலும் இலச்சினையிடுவித்தலும் வேண்டும் ; அத்துடன் அவ்வளவுகளின் கட்டுப்பாட்டையுடைய ஆளுக்கு ஒரு பாகத்தையும் அதிகாரமளிக்கப்படும் பகுப்பாய்வாளருக்கு மறுபாகத்தையும் ஒப்படைத்தல் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்படும் பகுப்பாய்வாளர் ஒருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இரசாயனப் பொருளின் பகுப்பாய்வை அல்லது சோதனையைச் செய்துள்ளவிடத்து, அவரது சோதனையின் அல்லது பகுப்பாய்வின் பெறுபேறுகளைச் சான்றிதழொன்றில் அல்லது அறிக்கையொன்றில் எடுத்துக்கூறி, அதிகாரசபைக்கு அச்சான்றிதழை அல்லது அவ்வறிக்கையை அவர் வழங்குதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், இப்பிரிவின்கீழ் பகுப்பாய்வுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் மாதிரி தொடர்பாக அதிகாரமளிக்கப்படும் பகுப்பாய்வாளரொருரினால் கையொப்பமிடப்பட்டவொரு சான்றிதழை அல்லது அறிக்கையைக் காண்பித்தல், அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

## பாகம் VI

### குறைநிரப்பானவை

*சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்புடைமை.*

**32.** சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், எந்த இரசாயனப் பொருட்களின் இறக்குமதி இச்சட்டத்தினால் தடைசெய்யப்படுகின்றதோ அல்லது மட்டுப்படுத்தப்படுகின்றதோ அந்த இரசாயனப் பொருட்கள் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியை

வலுவுறுத்தும், அத்துடன் அவற்றின் மீறுகையை தடுக்கும் மற்றும் அதற்குத் தண்டனையளிக்கும் நோக்கங்களுக்காக ஏற்புடையன வாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய இரசாயனப் பொருட் கள், சுங்கக் கட்டளைச் சட்டத்துக்கான அட்டவணை ஆ இல் உள்வரவுத் தடைகளும் மட்டுப்பாடுகளும் பற்றிய பட்டோலையில் உள்ளடக்கப்படுவனவாகக் கருதப்படுதலும் வேண்டும். எந்த இராசயனப் பொருட்களின் ஏற்றுமதி இச்சட்டத்தினால் தடை செய்யப்படுகின்றதோ அல்லது மட்டுப்படுத்தப்படுகின்றதோ அந்த இரசாயனப் பொருட்கள், அந்த அட்டவணையில் வெளிச் செலவுத் தடைகளும் மட்டுப்பாடுகளும் பற்றிய பட்டோலையில் உள்ளடக்கப்படுவனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

*பொய்யான வெளிப்படுத்து கைகளுக்கெதி ரான தடை.*

**33.** ஆளெவரும், தனக்காக அல்லது வேறெவரேனும் ஆளுக் காக :—

(அ) இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழான ஏதேனும் அனுமதிப் பத்திரத்தின், அதிகாரத்தின், அதிகாரவளிப்பின், அல் லது சான்றிதழின் வழங்குகைக்கான, அளிப்புக்கான, ஒப்படைப்புக்கான, மாற்றத்துக்கான அல்லது புதுப்பித் தலுக்கான நோக்கத்துக்காக ; அல்லது

(ஆ) இரசாயனப் பொருட்களின் இறக்குமதியாளர், ஏற்று மதியாளர் மற்றும் வியாபாரி ஒருவராகப் பதிவுசெய்து கொள்ளப்படுவதற்கான நோக்கத்துக்காக,

ஏதேனும் விபரத்தில் பொய்யானதாகவுள்ள ஏதேனும் வெளிப் படுத்துகையை அல்லது கூற்றை வாய்மொழிமூலமாக அல்லது எழுத்தில் அளித்தலோ, அல்லது அதனைக் கொண்டுள்ளதென அறிந்துகொண்டு அத்தகைய ஏதேனும் வெளிப்படுத்துகையை அல்லது கூற்றைக் கூறுதலோ அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பித்தலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது.

*அங்கீகாரத்தை மறுத்தலும் இல்லாதாக்கு தலும்.*

**34.** (1) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் எவரேனுமாளுக்கு ஏதேனும் அங்கீகாரத்தை அளிப்பதற்கான தத்துவம் உள்ளவிடத்து, அவர், தமது தற்றுணிபில் :—

(அ) உசிதமானவையெனத் தாம் கருதக்கூடியவாறான அத்த கைய நிபந்தனைகளை அதன்கண் உட்புகுத்தலாம்;

(ஆ) அங்கீகாரத்தை அளிப்பதற்கு மறுக்கலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழான ஒவ்வொரு முடிபும், அமைச்சருக்கான மேன்முறையீடொன்றுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(3) இப்பிரிவானது, அது உரிமமொன்றுக்கு ஏற்புடையதாகின்ற அதேமுறையில் அனுமதிப்பத்திரமொன்றுக்கும், அதிகாரமொன்றுக்கும், அதிகாரவளிப்பொன்றுக்கும் அல்லது சான்றிதழொன்றுக்கும் அத்துடன் அது ஆளொருவருக்கு ஏற்புடையதாகின்ற அதேமுறையில் ஏதேனும் உருவகத்துக்கும் ஏற்புடையதாகின்றது.

*தேடுதல் ஆணைப் பத்திரங்கள்.*

**35.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதிக்கு முரணாக எப்பொருளும் அல்லது ஆவணமும் ஏதேனும் இடத்தில் அல்லது வளவுகளில் வைத்திருக்கப்படுகின்றது, உடைமையில் வைத்திருக்கப்படுகின்றது, விற்பனை செய்யப்படுகின்றது அல்லது உற்பத்திசெய்யப்படுகின்றது என அல்லது இச்சட்டத்தின்கீழான தவறொன்றாகவிருக்கும் ஏதேனும் கொடுக்கல் வாங்கலுடன் அல்லது கையாளுகையுடன் அல்லது நிறைவேற்றப்படின், இச்சட்டத்துக்கெதிரான தவறொன்றாகவிருக்கும் ஏதேனும் உட்கருதப்பட்ட கொடுக்கல் வாங்கலுடன் அல்லது கையாளுகையுடன் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்ட ஏதேனும் ஆவணம், ஏதேனும் இடத்தில் அல்லது வளவுகளில் உள்ளதெனச் சந்தேகிப்பதற்குக் காரணமுண்டென நீதிவான் ஒருவர் சத்தியத்தின் மீதான தகவல்மூலம் திருப்திப்படுமிடத்து தேடுதல் ஆணைப்பத்திரமொன்றில் பெயர்குறிப்பிடப்பட்ட இடத்தினுள் அல்லது வளவுகளினுள், தேவையாயின் வலோத்காரத்தின் மூலம், உதவியாளர்களுடனோ அவர்களின்றியோ, பிரவேசிப்பதற்கும், அவ்விடத்தை அவ்வளவுகளை மற்றும் அதன்கண் காணப்படும் எவரேனுமாளைத் தேடுகையிடுவதற்கும், அவ்விடத்தில் அல்லது அவ்வளவுகளில் அல்லது அத்தகைய எவரேனு மாளின் உடைமையில் காணப்படும் எது தொடர்பாகவும் இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளதென அல்லது அவ்வாறு காணப்படும் ஏதேனும் ஆவணம், மேற்கூறப்பட்டவாறான அத்தகையவோர் ஆவணமாகவுள்ளதெனச் சந்தேகிப்பதற்குக் காரணமிருப்பின், அத்தகைய பொருளை அல்லது ஆவணத்தைக் கைப்பற்றுவதற்கும் தடுத்துவைப்பதற்கும், ஆணைப்பத்திரத்தின் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளான ஏதேனும் நேரத்தில் அல்லது நேரங்களில், ஆணைப்பத்திரத்தில் பெயர்குறிப்பிடப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது ஆளுக்கு அதிகாரமளிக்கின்ற அந்த ஆணைப்பத்திரத்தை அவர் வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் தேடுகையின் நோக்கத்துக்காக, அவ்வுட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அலுவலர்களுள் அல்லது ஆட்களுள் எவர்களினாலும் அதற்கென விடுக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு, பணிப்புக்கு அல்லது கொடுக்கப்பட்ட சைகைக்கு இணங்கியொழுக, ஏதேனும் கலத்துக்கு, படகுக்கு, விலங்குக்கு அல்லது வாகனத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆளினால் நிறுத்தப்படாத ஏதேனும் கலத்தை, படகை, விலங்கை அல்லது வாகனத்தை நிறுத்துவதற்கு அவசியமாகவிருக்கக் கூடியவாறான அத்தகைய எல்லா வழிமுறைகளும் எடுக்கப் படலாம் ; அத்துடன் அத்தகைய உபாயங்களும் அத்தகைய வலோத்காரமும் பயன்படுத்தப்படலாம்.

*அந்தரங்கத் தகவலை வெளிவிடுதல் தொடர்பான மீறுகைக்கான தண்டனை.*

**36.** (1) இரண்டாம் உட்பிரிவுக்கமைய, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் பரிசோதனையின்போது பரிசோதகரொருவருக்கு அல்லது சர்வதேசப் பரிசோதகரொருவருக்கு அல்லது பரிசோதனைக்குழுவின் உறுப்பினரொருவருக்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையிலிருந்து அல்லது விபரத்திரட்டிலிருந்து அல்லது அளிக் கப்பட்ட ஏதேனும் கூற்றிலிருந்து அல்லது வழங்கப்பட்ட அல்லது அவரினாற் பெறப்பட்ட ஏதேனும் தகவலிருந்து அதிகாரசபையினால் இஆத ஒழுங்கமைப்பிடமிருந்து அல்லது அரசாம் திறத்தவரிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் அந்தரங்கத் தகவலை வேறெவரேனுமாளுக்கு வெளிவிடுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணமொன்றுக்கு அல் லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தகவல், அது எவ்வாளின் அலுவல்கள் தொடர்பானதோ அவ்வாளின் எழுத்திலான சம்மதத்துடன் மட்டுமே அல்லது —

(அ) சமவாயத்தின்கீழான அதன் கடப்பாடுகளை இலங்கை நிறைவேற்றுவதனை இயலச் செய்யும் ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும்,

நோக்கத்துக்காக மட்டுமே வெளிவிடப்படலாம்.

பொதுவான தண்டம்.

**37.** (1) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதிகளை அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் சட்டமுறையாக விடுக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது பணிப்பை அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் உரிமத்தில், அதிகாரவளிப்பில், அனுமதிப்பத்திரத்தில் அல்லது அதிகாரத்தில் அடங்கியுள்ள ஏதேனும் நிபந்தனையை அல்லது ஏற்பாட்டை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொவ்வொரு வரும், இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழான தவறொன்றைப் புரிய எத்தனிக் கின்ற அல்லது அத்தவறு புரியப்படுவதற்கு உடந்தையாகவிருக் கின்ற ஆளொவ்வொருவரும், அதே தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழான தவறொன்று ஆட்கள் குழு வொன்றினாற் புரியப்படுமிடத்து, அப்போது —

(அ) அவ்வாட்கள்குழு கூட்டிணைக்கப்பட்ட ஆட்கள் குழு வொன்றாகவிருப்பின், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் பணிப்பாளராக, பொது முகாமையாள ராக, செயலாளராக அல்லது வேறு அதை ஒத்த அலு வலராக இருந்த ஆளொவ்வொருவரும் ; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இராதிருப்பின், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவில் உறுப்பினரொருவராக இருந்த ஆளொவ் வொருவரும்,

தவறாகவமைகின்ற செயல் அவரது அறிவோ சம்மதமோ இன்றி நடைபெற்றிருந்தாலொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளொவ்வொருவரும், ஒவ்வொரு தவறுக்காகவும், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

**38.** (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கு எவரேனுமாளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கும் நீதிமன்றம், இதனகத்துமுன்னர் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுள் எவற்றையும் விதிக்கலாமென்பதுடன், அது தகுதியானதென எண்ணின், தவறானது எந்தப் பொருட்கள் தொடர்பில் புரியப்பட்டதோ அந்தப் பொருட்கள் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும் அத்துடன் அத்தகைய பொருளை ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் எதனையும் கைப்பற்றி அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமெனவும் கட்டளையிடலாம். இழப்பிக்கப்படுதல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட இழப்பித்தலுக்கான கட்டளையொன்று

(அ) இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் முன்வைக்கப்படாதவிடத்து, அத்தகைய இழப்பித்தற் கட்டளைக்கெதிராக எந்தக் காலப்பகுதிக்குள் மேன்முறையீடொன்று முன்வைக்கப்படலாமோ அந்தக் காலப்பகுதி முடிவடைவதன்மீது

(ஆ) அத்தகைய இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று முன்வைக்கப்பட்டும், அத்துடன் அத்தகைய இழப்பித்தற் கட்டளையை உறுதிப்படுத்தும் அல்லது ஏற்றுக்கொள்ளும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளைக்கெதிராக உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் செய்யப்படாதும் உள்ளவிடத்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அத்தகைய கட்டளையினின்று எந்தக் காலப்பகுதிக்குள் உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று முன்வைக்கப்படலாமோ அந்தக் காலப்பகுதி முடிவடைவதன்மீது

(இ) அத்தகைய இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று முன்வைக்கப்பட்டும் அத்துடன் முதல் குறிப்பிடப்பட்ட மேன்முறையீட்டின்மீது மேன்முறை

யீட்டு நீதிமன்றத்தின் தீர்மானத்தினின்று உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று முன்வைக்கப்பட்டு உள்ளவிடத்து இழப்பித்தற் கட்டளையை உறுதிப்படுத்தும் அல்லது ஏற்றுக்கொள்ளும் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தின்மீது,

பயனுறுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

**39.** (1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர், பின்வரும் நோக்கங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) எக்கருமம் தொடர்பில் இச்சட்டத்தினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமம் தொடர்பில் விதிக்கப்படும் நியதிகள், நிபந்தனைகள், வரையறைகள் அல்லது வேறு மட்டுப்பாடுகள் என்பவற்றை விதித்துரைப்பதற்காகவும் ;

(ஆ) அட்டவணைகளுள் எவற்றுக்கும் ஏதேனும் விடயத்தைச் சேர்ப்பதற்காகவும் அல்லது அவற்றிலிருந்து ஏதேனும் விடயத்தை நீக்கிவிடுவதற்காகவும் அல்லது அட்டவணைகளுள் எவற்றையும் வேறேதேனும் முறையில் மாற்றுவதற்காகவும், வேறுபடுத்துவதற்காகவும் அல்லது திருத்துவதற்காகவும் ;

(இ) (i) இச்சட்டத்தின்கீழான அங்கீகாரம் எவ்வாட்களுக்கும், எச்சூழ்நிலைகளிலும், எந்த நியதிநிபந்தனைகளுக்கமையவும் அளிக்கப்படலாமோ அல்லது மறுக்கப்படலாமோ அவ்வாட்களையும், அச்சூழ்நிலைகளையும், அந்நியதிநிபந்தனைகளையும் ; அத்துடன்

(ii) இச்சட்டத்தின்கீழ் அங்கீகாரத்துக்கான விண்ணப்பங்கள் எந்த முறையிலும் எப்படிவத்திலும் செய்யப்பட்டுக் கையாளப்படலாமோ அந்த முறையையும் படிவத்தையும்,

குறித்துரைப்பதற்காகவும் ;

(ஈ) பொதுவாக இவ்வுட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட கருமங்களின் அல்லது விடயங்களின் இடைநேர்விளைவான

அல்லது அவற்றுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங் களுக்காகவும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டின் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதிப்படக்கூடிய வாறான விரைவில் அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகையஅங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியைப் பற்றிய அறிவிப் பொன்று வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*பகிரங்க அலுவலர்களைப் பாதுகாத்தல்.*

**40.** ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராகக் கொண்டுவரப்படும் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்குத் தொடுப்பில் அதிகாரசபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவு திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்குத் தொடுப்பில் அதிகாரசபைக்குச் செலுத்தப் படும் அல்லது அதனால் அறவிடப்படும் எவையேனும் செலவு கள் திரட்டுநிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

*1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப் படைத்தற் சட்டத்தைத் திருத்துதல்.*

**41.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8ஆம் இலக்க, மீளவொப்படைத்தற் சட்டம், அச்சட்டத்துக்கான அட்டவணையின் பாகம் ஆ வுக்கு நேர்முன்னர் பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது

"(51) 2007 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, இரசாயன ஆயுதங்கள் சமவாயச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட் பட்ட தவறொன்று.".

*அரசுகளுடன் ஏலவேயுள்ள மீளவொப்படைத்தல் ஒழுங்கேற் பாடுகள், சட்டத்திலுள்ள தவறுகளுக்கு*

**42.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று இலங்கை அரசாங்கத்தினால் ஏதேனும் அரசுடன் செய்யப்பட்ட மீளவொப்படைத்தல் ஒழுங்கேற்பாடொன்று வலுவிலுள்ள விடத்து, அத்தகைய ஒழுங்கேற்பாடு, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்திற் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் மீள

ஏற்பாடு செய்வனவாகக் கருதப்படுதல்.

வொப்படைத்தற்கான ஏற்பாட்டை உள்ளடக்குவதாகக் கருதப் படுதல் வேண்டும்.

சட்டத்தின்படி தவறுகள் தொடர்பில், அமைச்சர், சமவாயத்தை இலங்கைக்கும் குறித்தசில அரசுகளுக்கும் இடையேயான மீளவொப் படைத்தல் ஒழுங் கேற்பாடாகக் கொள்ளலாம்.

**43.** இலங்கை அரசாங்கத்தினால் ஏதேனும் அரசுகளுடன் மீளவொப்படைத்தல் ஒழுங்கேற்பாடெதுவும் செய்யப்பட்டி ராதவிடத்து, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப் படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, சமவாயத்தை, இச்சட்டத் திற் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் மீளவொப்படைத் தலுக்காக ஏற்பாடு செய்து இலங்கை அரசாங்கத்தினால் அந்த அரசுடன் செய்யப்பட்ட மீளவொப்படைத்தல் ஒழுங்கேற் பாடொன்றாகக் கொள்ளலாம்.

எந்த ஆட்களின் மீளவொப்படைப் புக்காக வேண்டு கோளொன்று விடுக்கப்படு கின்றதோ அந்த ஆட்களுக்கெதிராக எடுக்கப்படும் வழி முறைகள் பற்றி வேண்டுகோள் விடுகின்ற அரசுக்கு அறிவிப்பதற்கு அமைச்சருக்குள்ள கடமை.

**44.** இச்சட்டத்தில் விவரிக்கப்பட்ட தவறொன்றுக்குக் குற்றஞ் சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளை மீளவொப்படைப்பதற்காக எந்த அரசுடன் இலங்கை அரசாங்கம் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளதோ அந்த அரசொன்றின் அரசாங்கத்தினால் அல்லது அதன்சார்பில் இலங்கை அரசாங் கத்துக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்படுமிடத்து, அமைச்சர், இலங்கை அரசாங்கத்தின் சார்பில், அத்தவறுக்காக அவ்வாளுக் கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்காக அல்லது அவரை மீளவொப் படைப்பதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள அல்லது எடுப்பதற்கு உத்தேசிக்கின்ற வழிமுறைகள் பற்றி வேண்டு கோள் விடுக்கின்ற அரசுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

ஓர் அரசுக்கான உதவி.

**45.** (1) இரண்டாயிரத்து இரண்டாமாண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியற் கருமங்களிலான பரஸ்பர உதவிச் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் III ஆம் பாகத்தின்கீழ் தவறொன்றைப் புலனாய்வு செய்வதற்கும் அதற்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் அவசியமான விடயங்களிலெல்லாம், இலங்கை அரசாங்கத்துக்கும், ஒன்றில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழான கட்டளைமூலம் அமைச்சரினாற் குறித்துரைக் கப்பட்ட பொது நலவரசு நாடுகளாகவுள்ள அல்லது மேற்கூறப் பட்ட சட்டத்தின் நியதிகளின்படி இலங்கை அரசாங்கம் எந்தப் பொதுநலவரசு நாடுகளல்லாத நாடுகளுடன் உடன்படிக்கை யொன்றைச் செய்துகொண்டுள்ளதோ அந்தப் பொதுநலவரசு நாடுகளல்லாத நாடுகளாகவுள்ள ஏனைய அரசுகளுக்குமிடையே உதவி வழங்குதல் தொடர்பில் ஏற்புடைத்தற்பாலனவாதல் வேண்டும்.

(2) ஓர் அரசுக்கு உதவியளித்தலானது, அமைச்சர் தகுதியானவையென எண்ணுகின்றவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமையச் செய்யப்படலாம்.

**46.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**47.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய,— *பொருள்கோடல்*

"அதிகாரமளிக்கப்படும் பகுப்பாய்வாளர்" என்பது, அரசாங்கப் பகுப்பாய்வாளர், மேலதிக அரசாங்கப் பகுப்பாய்வாளர், ஒரு பிரதி அரசாங்கப் பகுப்பாய்வாளர் ஒரு சிரேட்ட உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளர் மற்றும் ஓர் உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளர் என்று பொருளாகும்;

"இரசாயனப் பொருட்கள்" என்பது, இச்சட்டத்துக்கான அட்டவணைகள் I, II, III என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட இச்சட்டம் ஏற்புடையதாகின்ற இரசாயனப் பொருட்கள் என்று பொருளாகும் ;

"இரசாயனஆயுதம்" என்பது, ஒன்றாக அல்லது தனித்தனியாக, பின்வருவன என்று பொருளாகும் :—

(அ) சமவாயத்தின்கீழ் தடைசெய்யப்படாத நோக்கங்களுக்காக உட்கருதப்படுமிடத்துத் தவிர, வகைகளும் அளவுகளும் அத்தகைய நோக்கங்களுடன் ஒத்திருக்கின்றவரை, நச்சுத்தன்மைய இரசாயனப் பொருளும் அவற்றின் முற்பொருட்களும் ;

(ஆ) போர்ப்படைக்கலங்களையும் உபாயங்களையும் ஈடுபடுத்துவதன் விளைவாக வெளிப்படுத்தப்படும் (அ) என்னும் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட அந்த நச்சுத்தன்மைய இரசாயனப் பொருட்களின் நச்சுத்தன்மைய இனப் பொதுப் பண்புகளின்மூலம் இறப்பை அல்லது வேறு தீங்கை விளைவிப்பதற்குக் குறிப்பாகத் திட்டமிடப்பட்ட அத்தகைய போர்ப்படைக் கலங்களும் உபாயங்களும் ; அத்துடன்

(இ) உட்பந்தி (ஆ) இல் குறித்துரைக்கப்பட்ட போர்ப் படைக்கலங்களையும் உபாயங்களையும் ஈடுபடுத்தல் சம்பந்தமாக நேரடியாகப் பயன்படுத்துவதற்காகக் குறிப்பாகத் திட்டமிடப்பட்ட ஏதேனும் சாதனம் ;

“முற்பொருள்” என்பது, நச்சுத்தன்மைய இரசாயனப் பொருளொன்றின் எத்தகையதுமான முறையிலுமான தயாரிப்பின் எக்கட்டத்திலும் பங்குபற்றும் ஏதேனும் இரசாயனப் பொருள் எதிர்விளைவாக்கி என்று பொருளாகும். இது, இருபுடை அல்லது பல்புடை இரசாயன முறைமையின் ஏதேனும் முக்கிய ஆக்கக் கூற்றையும் உள்ளடக்கும் ;

“இச்சமவாயத்தின்கீழ் தடைசெய்யப்படாத நோக்கம்” என்பது,—

(அ) கைத்தொழில், கமத்தொழில், ஆராய்ச்சி, மருத்துவ, மருந்தாக்கல் அல்லது வேறு சமாதான நோக்கங்களென்றும் ;

(ஆ) பாதுகாப்புச்சார் நோக்கங்கள், அதாவது, நச்சுத்தன்மைய இரசாயனப் பொருட்களுக்கெதிரான பாதுகாப்புக்கும் இரசாயன ஆயுதங்களுக்கெதிரான பாதுகாப்புக்கும் நேரடித் தொடர்புடைய அந்நோக்கங்களென்றும் ;

(இ) போர்முறையொன்றாக இரசாயனப் பொருட்களின் பயன்பாட்டுடன் சம்பந்தப்படாதவையும் இரசாயனப் பொருட்களின் நச்சுத்தன்மைய இனப் பொதுப் பண்புகளைப் பயன்படுத்துவதன்மீது தங்கியிராதவையுமான இராணுவ நோக்கங்களென்றும், ; அத்துடன்

(ஈ) உள்நாட்டுக் கலகக் கட்டுப்பாட்டு நோக்கங்களுட்பட, சட்ட வலுவுறுத்தலென்றும்,

பொருளாகும் ;

“கலகக் கட்டுப்பாட்டு இரசாயன உபகரணம்” என்பது, அட்டவணையொன்றில் நிரற்படுத்தப்படாததும்,

உட்படுத்தப்படுகை முடிவுறுத்தப்படுவதனை அடுத்து சிறிது நேரத்தினுள் மறைந்துபோகும் உணர்வரிப்பை அல்லது இயலாமையை விளை விக்கும் உடல்சார் தாக்கங்களை மனிதர்களில் விரைவாக விளைவிக்கக்கூடியதுமான ஏதேனும் இரசாயனப் பொருள் என்று பொருளாகும் ;

"நச்சுத்தன்மைய இரசாயனப் பொருள்" என்பது, இச்சட் டத்துக்கான I ஆம், II ஆம், III ஆம் அட்டவணை களில் குறித்துரைக்கப்பட்டதும், வாழ்வுச் சுற்று வட்டங்கள் மீதான அதன் இரசாயன நடவடிக் கையினூடாக மனிதர்களுக்கு அல்லது விலங்கு களுக்கு இறப்பை, தற்காலிக உடற்றகுதியீனத்தை அல்லது நிரந்தரத் தீங்கை விளைவிக்கக்கூடியது மான ஏதேனும் இரசாயனப் பொருள் என்று பொருளாகும் என்பதுடன், அத்தகைய இரசாய னப் பொருட்களின் மூலத்தை அல்லது தயாரிப்பு முறையைப் பொருட்படுத்தாமலும், அவை செய லிடங்களில், போர்ப்படைக் கலச்சேம இடங்களில் அல்லது வேறெங்கேனும் தயாரிக்கப்படுவதனைப் பொருட்படுத்தாமலும், அவற்றையும் உள்ளடக்கும்;

"அட்டவணைப்படுத்தப்படாத தனித்துவ அமைப்பியல் சார் இரசாயனப் பொருள்" என்பது, ஏதேனும் இரசாயனப் பொருளின் ஒட்சைட்டுகளையும், சல்பைட்டுகளையும், உலோகக் கார்பனேற் றுக்களையும் தவிர, இரசாயனப் பெயரின்மூலம், அமைப்புச்சார் வாய்ப்பாடு மூலம் (அறியப் பட்டிருப்பின்) மற்றும் இரசாயனப் பொழிப்புகள் சேவைப் பதிவக இலக்கத்தின் மூலம் (குறித் தளிக்கப்பட்டிருப்பின்) அடையாளங்காணப் படத்தக்கதும், கார்பனின் எல்லாக் கலவைகளை யும் கொண்டுள்ள இரசாயனக் கலவைகளின் வகுப்பைச் சேர்ந்ததுமான ஏதேனும் இரசாயனப் பொருள் என்று பொருளாகும்.

## அட்டவணை I

| இரசாயனப் பெயர் | (CAS பதிவக இலக்கம்) |
|---|---|
| **அ. நச்சுத்தன்மைய இரசாயனப் பொருட்கள் :** | |
| (1) O- அற்கயில் ($\lesssim C_{10}$, சைக்குளோ அற்கயில் உட்பட) அற்கயில் (Me, Et, n-Pr அல்லது i-Pr) பொசுபோனோ புளோரைற்ரேற்றுக்கள் | (107-44-8) |
| உ.ம் -சரின்: O-ஐசோபுரொபைல் மெதைல் பொசுபோனோபுளோரைற்று | (96-64-0) |
| சொமன் : O-பினக்கோலைல் மெதைல் பொசுபோனோபுளோரைட்டு | |
| (2) O- அற்கயில் ($\lesssim C_{10}$, சைக்குளோ அற்கயில் உட்பட) N,N - டைஅற்கயில் | |
| (Me, Et, n-Pr அல்லது i-Pr) பொசுபோரமிடோ சயனைரேற்றுக்கள் | |
| உ.ம் -ரபுன்: O-ஈதைல் N,N - டைமெதையில் பொசுபோரமிடோசயனரேற்று | (77-81-6) |
| (3) O- அற்கயில் (HL அல்லது $\lesssim C_{10}$, சைக்குளோ அற்கயில் உட்பட) S-2-டைஅற்கயில் | |
| (Me, Et, n-Pr அல்லது i-Pr) - அமினோஎதயில் அற்கயில் | |
| (Me, Et, n-Pr அல்லது i-Pr) பொசுபோனோதியோ லேற்றுக்கள் ; அத்துடன் | |
| நேரொத்த அற்கயிலேற்றப்பட்ட அல்லது புரோத்தனேற்றப்பட்ட உப்புகள். | |
| உ.ம் : VX :O-எதயில் S-2 டைஐசோ புரோபைல் அமினோஎதயில் மெதைல் பொஸ் போனோதியலேற்று | (50782-69-9) |
| (4) சல்பர் கடுகுகள் : | |
| 2-குளோரோஎதயில்குளோரோமெதைல் சல்பைற்று | (2625-76-5) |
| வாயு : Bis (2 குளோரோஎதயில்) சல்பைற்று | (505-60-2) |
| Bis (2-குளோரோஎதயில்தியோ) மெதேன் | (63869-13-6) |
| செஸ்கியூகடுக : 1,2-Bis (2-குளோரோஎதயில் தியோ) ஈதேன் | (3563-36-8) |
| 1,3-Bis (2-குளோரோஎதயில்தியோ) - N-புரோப்பேன் | (63905-10-2) |
| 1,4-Bis (2-குளோரோஎதயில்தியோ) - N-பூட்டேன் | (142868-93-7) |
| 1,5-Bis (2-குளோரோஎதயில்தியோ) - N-பென்ற்ரேன் | (142868-94-8) |

| இரசாயனப் பெயர் | (CAS பதிவக இலக்கம்) |
|---|---|
| Bis (2-குளோரோஎதயில்தியோமெதைல்)ஈதர் | (63918-90-1) |
| O-கடுகு : Bis (2-குளோரோஎதயில்தியோஎதயில்) ஈதர் | (63918-89-8) |
| (5) உலூ யிசைட்டு | |
| உலூ யிசைட்டு 1:2 - (குளோரோவினைல் டைகுளோரோஆர்சீன்) | (541-25-3) |
| உலூ யிசைட்டு 2:Bis (2 - குளோரோவினைல்) குளோரோஆர்சீன் | (40334-69-8) |
| உலூ யிசைட்டு 2:Tris (2-குளோரோவினைல்) ஆர்சீன் | (40334-70-1) |
| (6) நைதரசன் கடுகுகள் : | |
| HN1 : Bis (2-குளோரோஎதயில்) எதைலமின் | (538-07-8) |
| HN2 : Bis (2-குளோரோஎதயில்) எதைலமின் | (51-75-2) |
| HN3 : Tris (2-குளோரோஎதயில்) அமின் | (555-77-1) |
| (7) சக்ஸிரொக்சின் | (35523-89-8) |
| (8) ரைசின் | (9009-86-3) |

**ஆ. முற்பொருட்கள் :**

| | |
|---|---|
| (1) அற்கயில் (Me, Et, n-Pr அல்லது i-Pr) பொசுபோனைல்டை புளோரைட்டு | (676-99-3) |
| உ.ம். : DF : மெதைல்பொசுபோனைல்டை புளோரைட்டு | |
| (2) O- அற்கயில் (H அல்லது $\leq C_{10}$, சைக்குளோ அற்கயில் உட்பட) O-2டைஅற்கயில் (Me, Et, n-Pr அல்லது i-Pr) அமினோஎதயில் அற்கயில் (Me, Et, n-Pr அல்லது i-Pr) பொசுபோனைற்றுக்கள் அத்துடன் நேரொத்த அற்கயிலேற்றப்பட்ட அல்லது புரோத்தனேற்றப்பட்ட உப்புகள் | |
| உ.ம் : QL : O-எதயில் O-2-டைஐசோ புரோபைல் அமினோஎதயில் மெதைல் பொசுபோனைற்று | (57856-11-8) |
| (3) குளோரோசரின் : O-ஐசோபுரொபைல் மெதைல் பொசுபோனோ குளோரிரேற்று | (1445-76-7) |
| (4) குளோரோசொமன் : O-பினகொலைல் மெதைல் பொசுபோனோ குளோரிரேற்று | (7040-57-5) |

## அட்டவணை II

| இரசாயனப் பெயர் | (CAS பதிவக இலக்கம்) |
|---|---|
| **அ. நச்சுத்தன்மைய இரசாயனப்பொருட்கள் :** | |
| *(1)* அமிட்டன் : O, O-டைதைல் S-(2 - (டைதைல் அமினோ) எதயில்) பொசுபொரோதியலேற்றும் நேரொத்த அற்கயிலகற்றப்பட்ட அல்லது புரோத்தனேற்றப்பட்ட உப்புகள் | *(78-53-5)* |
| *(2)* PFIB : *1,1,3,33*-பென்ரபுளோரோ-*2* - (டிரைபுளோரோமெதைல்). *1* - புரொப்பீன் | *(382-21-8)* |
| *(3)* BZ : *3*-குவினுகிளைடினைல் பென்சிலேற்று (*) | *(6581-06-2)* |
| **ஆ. முற்பொருட்கள் :** | |
| *(1)* எந்தப் பொசுபரசு அணுவுடன் ஒரு மெதைல், எதயில் அல்லது புரோபைல் (வழமையான அல்லது ஐசோ) தொகுதி, (ஆனால் மேலதிகக் காபன் அணுக்களல்ல) பிணைக்கப்படுகின்றதோ அந்தப் பொசுபரசு அணுவைக் கொண்டுள்ள, அட்டவணை I இல் நிரற்படுத்தப்பட்டவை தவிர்ந்த இரசாயனப் பொருட்கள் | |
| *உ.ம்* : மெதைல்பொசுபோனைல் டைக்குளோரைற்று | *(676-97-1)* |
| டைமெதைல் மெதைல்பொசுபனேற்று | *(756-79-6)* |
| விலக்களிப்பு : புனோபொசு : O-எதயில் S-பெனைல் எதயில்பொசுபொனோதியோலொதியோனேற்று | *(944-22-9)* |
| *(2)* N, N-டைஅற்கயில் (Me, Et, n-Pr அல்லது i-Pr) பொசுபோரமிடிக் டைவறலைற்றுக்கள் | |
| *(3)* டைஅற்கயில் (Me, Et, n-Pr அல்லது i-Pr) - என், என்-டைஅற்கயில் (Me, Et, n-Pr அல்லது i-Pr) பொசுபோரமிரேற்றுக்கள் | |
| *(4)* ஆசனிக்கு டிரைகுளோரைற்று | *(7784-34-1)* |
| *(5)* *2,2* - டைபெனைல் - *2* - ஹை தரொக்சிஅசற்றிக் அமிலம் | *(76-93-7)* |
| *(6)* குவினுகிளைடின் - *3* - ஒஎல் | *(1619-34-7)* |
| *(7)* N, N - டைஅற்கயில் (Me, Et, n-Pr அல்லது i-Pr) அமினோஎதைல்-*2* - குளோரைற்றுக்களும் நேரொத்த புரோத்தனேற்றப்பட்ட உப்புகளும் | |

| இரசாயனப் பெயர் | (CAS பதிவக இலக்கம்) |
|---|---|
| (8) N, N-டைஅற்கயில் (Me, Et, n-Pr அல்லது i-Pr) அமினோஈதேன்-2-Ols அத்துடன் நேரொத்த புரோத்தனேற்றப்பட்ட உப்புகளும் | (108-01-0) |
| விலக்களிப்புகள் : N, N-டைமெதைல் அமினோ எதனோல் மற்றும் நேரொத்த புரோத்தனேற்றப்பட்ட உப்புகள் | |
| N, N-டைமெதைல் அமினோஎதனோல் மற்றும் நேரொத்த புரோத்தனேற்றப்பட்ட உப்புகள் | (100-37-8) |
| (9) N, N-டைஅற்கயில் (Me, Et, n-Pr அல்லது i-Pr) அமினோஈதேன்-2 தியோல்கள் மற்றும் நேரொத்த புரோத்தனேற்றப்பட்ட உப்புகள் | |
| (10) தியோடைகிலைக்கோல் : Bis (2-ஹைதரொக்சி எதயில்) சல்பைட்டு | (111-48-8) |
| (11) பினகொலைல் அற்ககோல் : 3.3 - டைமெதைல் பட்டன்-2-Ol | (464-07-3) |

## அட்டவணை III

| இரசாயனப் பெயர் | (CAS பதிவக இலக்கம்) |
|---|---|
| ***அ. நச்சுத்தன்மைய இரசாயனப் பொருட்கள் :*** | |
| (1) பொஸ்ஜீன் கார்பனைல் டைக்குளோரைற்று | (75-44-5) |
| (2) சயனோஜன் குளோரைற்று | (506-77-4) |
| (3) ஐதரசன் சயனைட்டு | (74-90-8) |
| (4) குளோரோபிக்ரின் டிரைக்குளோரோதைட்றோமெதேன் | (76-06-2) |
| ***ஆ. முற்பொருட்கள் :*** | |
| (1) பொசுபரசு ஒட்சிகுளோரைற்று | (10025-87-3) |
| (2) பொசுபரசு டிரைக்குளோரைற்று | (7719-12-2) |
| (3) பொசுபரசு பென்ட்குளோரைற்று | (10026-13-8) |
| (4) டிரைமெதைல் பொசுபைட்டு | (121-45-9) |
| (5) டிரைஎதயில் பொசுபைட்டு | (122-52-1) |
| (6) டைமெதைல் பொசுபைட்டு | (868-85-9) |
| (7) டைஎதயில் பொசுபைட்டு | (762-04-9) |
| (8) சல்பர் மொனோகுளோரைற்று | (10025-67-9) |
| (9) சல்பர் டைகுளோரைற்று | (10545-99-0) |
| (10) தியோனைல் குளோரைற்று | (7719-09-7) |
| (11) எதயில் டைனொலமின் | (139-87-7) |
| (12) மெதைல்டைதனொலமின் | (105-59-9) |
| (13) டிரைதனொலமின் | (102-71-6) |

ாயன

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்